DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. – 120/2024

Prosecution PW – 1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜசேகர் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 19.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1, A4 produced A2 absent 355 BNSS petition filed and allowed. Accused A3 produced on VC, on memo by the Counsel for the Accused witness examine.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு நான் சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் பரணிதரன் என்பவருக்கு ரகசிய தகவலாளி போன் மூலம் கூறிய ரகசிய தகவலின் அடிப்படையில் என்னையும், சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு, முதல் நிலை காவலர் பழனிசாமி ஆகியோர்களை அழைத்துக்கொண்டு உபகரணங்களுடன் அவரவர்கள் இரு சக்கர வாகனத்தில் சம்பவ இடமான சிதம்பரம் பைபாஸ் சாலை அருகில் பைசல் மஹால் இந்தியன் ஆயிள் பெட்ரோல் பங்க் அருகில் சென்று கண்காணித்த போது அங்கு கூட்டமாக சிலர் நின்று கொண்டிருந்தனர் அதில் நான்கு பேர் நின்று கொண்டும் ஒருவர் ஏதோ ஒரு பொருளை பையில் இருந்து சிறிது சிறிதாக எடுத்துக்கொண்டும் இரண்டாவது நபர் பாலீத்தீன் கவரை எடுத்துஅதில் மடித்துக்கொடுத்தும் அதனை மூன்றாவது நபரும், நான்காவது நபரும் எடுத்துக்கொடுத்து வருவோரிடம் பணம் பெற்று பொட்டலங்களை விற்றுக்கொண்டிருந்தனர் , நாங்கள் அதனை பார்த்துக்கொண்டு அங்கே சென்ற போது

பொட்டலத்தை வாங்கிக்கொண்டிருந்தவ்ரகள் எங்களை கண்டதும் ஓடி விட்டனர். அந்த இடத்தை சுற்றி வளைத்து அந்த நான்கு நபர்களை பிடிக்க முற்பட்ட போது 3 நபர்கள் கைப்பை உடன் ஓடிவிட்டனர் . ஒரு நபரை பிடித்து விசாரித்த போது அவர் தன் பெயர் கிருஷ்ணகுமார் என்றும், விலாசத்துடன் கூறினார். தப்பி ஓடிய நபர்களை பிடித்து விசாரிக்க அவர்கள் பெயர் விஜி ( எ ) விஜயகுமார், உடப்பு சிவா என்கின்ற சிவா, சைப்பாள் என்கின்ற ரஞ்ஜித் என்று கூறினார். உதவி ஆய்வாளர் அவரிடம் கஞ்சா விற்றுக்கொண்டிருந்தீ்ரகளா என்றும் உங்களை சோதடனை செய்ய அரசு பதிவு பெற்ற அலுவலரோ, அல்லது நானே சோதனை செய்யலாமா என்று கேட்ட போது உதவி ஆய்வாளர் ஆகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். பின்னர் உதவி ஆய்வாளர் எதிரி கிருஷ்ணகுமாரை சோதனை செய்ய போது சிறு சிறு பாக்கெட்களாக 200 கிராம் கஞ்சாவும், பெரிய பாக்கெட்டில் 1 கிலோ கஞ்சாவும் ஆக மொத்தம் 1.200 கிராம் கஞ்சா வைத்திருந்தார். கஞ்சா வைத்திருந்த குற்ற காரணத்தைக் கூறி எதிரி கிருஷ்ணகுமாரை உதவி ஆய்வாளர் கைது செய்து அவரின் உறவினருக்கு தகவல் சொன்னார். பின்னர் 13.40 மணிக்கு எதிரி கிருஷ்ணகுமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்தஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் பொதுநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்பாகவும், முதல்நிலை காவலர் பழனிசாமி முன்பாகவும், பதிவு செய்தார். பின்னர் உதவி ஆய்வாளர் எதிரி வைத்திருந்த 1.200 கிராம் கஞ்சாவையும் கஞ்சா விற்ற பணம்ரூபாய் 900/- ஐ மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். கைப்பற்றிய கஞ்சாவில் இருந்து மாதிரிக்காவும், ரசாயண பகுப்பாய்விற்காக தலா இரண்டு 50 கிராம் வீதம் எடுத்து பாலீத்தீன் கவரில் போட்டு S 1, S 2 என குறியிட்டார். மீதம் உள்ள 1 கிலோ 100 கிராம் கஞ்சாவை அதே பொட்டலத்தில் போட்டு P 1 என குறிட்டு சீல் வைத்தா்ர. அதில் சாட்சிகளாக நானும், பழனிசாமியும் சாட்சி கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் தான் ஆய்வாளர் கைப்பற்றினா்ர. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ 1.** பின்னர் 16.00 மணிக்கு எதிரி மற்றும் தடய சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

உதவி ஆய்வாளருக்கு வந்த ரகசிய தகவல் எனக்கு நேரடியாகத் தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் மட்டும் தான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையொப்பம் இல்லை. 1 வது எதிரி கிருஷ்ணகுமார் வைத்திருந்த சிறு சிறு பொட்லங்கள் 200 கிராமில் இருந்து தான் மாதிரிக்காக இரண்டு 50 கிராம் எடுத்தோம். 1 கிலோ கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும், ரசாயண பகுப்பாய்விற்காக எடுக்கவில்லை. கைப்பற்றிய பணம் ரூபாய் 900/– ற்கான Denamination குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மாதிரி கஞ்சாவை பாலீத்தீன் கவரில் போட்டு தான் சீல் வைக்கப்பட்டது. ஆனால் நீதிமன்றத்தில் உள்ள புகைப்படத்தில் மாதிரி கஞ்சா பொட்டலங்கள் இளம்பச்சை நிற கவரில் போட்டு மடிக்கப்பட்டு அதில் விபர சிலீப் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபர சிலீப்பில் நான்கு எதிரிகளின் பெயர்கள் குறிப்பிட்டு 1 வது எதிரி மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் குற்ற எண், சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், 1 வது எதிரி கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து எந்த தடயப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லைஎன்றாலும், 2 – 4 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க ஆவணங்களுக்கு ஏற்றார் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

– Sd –

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

– Sd –

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்